2022 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கே.வி. குப்பம் தொகுதியை ஓரளவிற்கு நான் அறிவேன். அது, நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய முன்னாள் தொகுதி மற்றும் அதில் ஒரு பகுதி அவருடைய தொகுதியில் இருந்தது என்ற காரணத்தினால் நானும் அந்தப் பகுதியைப் பற்றி அறிவேன். இந்த ஆண்டு வேலூர் மாவட்டத்தில் ஒரு புதிய தொழிற்பூங்கா அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலுடன் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கடந்த 18 ஆம் தேதி நிதிநிலை அறிக்கையினைச் சமர்ப்பித்தபோது அறிவித்திருக்கிறார்கள். எனவே, கே.வி. குப்பம் தொகுதியில் தொழிற்பூங்கா அமையக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்குமென்று சொன்னால், எதிர்காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, அரசு அதுகுறித்து பரிசீலனை செய்யும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள். மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

சமுதாயக் கூடம்

***4022—திரு. கி. அசோக்குமார்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், சின்னமுத்தூர் கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், சுண்டேகுப்பம்

[2022 மார்ச் 21

ஊராட்சி, சின்னமுத்தூர் கிராமத்தில் போதிய இடவசதி இல்லாத காரணத்தால், இங்கு சமுதாயக் கூடம் தற்போது கட்ட இயலாத நிலை உள்ளது.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியத்துக்குட்பட்ட மாதேபட்டி, சோக்காடி, காட்டினாம்பட்டி, பெரியமுத்தூர், கனகமுட்லு ஆகிய கிராமங்களில் 1973–ல் கட்டப்பட்ட சமுதாயக் கூடங்கள் பழுதடைந்துள்ளன. அந்த சமுதாயக் கூடங்களைப் பழுதுபார்த்து செயல்பாட்டுக்குக் கொண்டுவர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கப் பகுதியில் அமைந்திருக்கிறது. உறுப்பினர் எழுப்பிய மூல வினாவில், புதிய சமுதாயக் கூடம் கட்ட வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். ஆனால், இப்போது பழுதடைந்த நிலையிலிருக்கக்கூடிய சமுதாயக் கூடத்தைச் சீரமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். புதிதாக இடம் தேர்வு செய்ய வேண்டும். அது அணைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், முழுமையும் நீர்நிலைப் புறம்போக்காக இருக்கின்றது. ஆகவே, புதிய இடத்தில், கட்டடத்தைக் கட்டுவது என்பது கடினம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, ஏற்கெனவே இருக்கின்ற அந்த சமுதாயக் கூடத்தைச் செப்பனிடுவதற்கு, மராமத்து செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.

2022 மார்ச் 21]

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்கள், வெளியே உள்ள திருமண மண்டபங்களுக்குச் செல்கின்றபோது பல இலட்சம் ரூபாய் செலவழிக்கின்ற நிலை இருக்கின்றது. இந்த நிலையை மாற்றுவதற்கு ஒவ்வோர் ஊராட்சியிலும் ஒரு சமுதாயக் கூடத்தைக் கட்டினால், அந்தச் சமுதாயக் கூடத்தின் மூலமாக அந்தக் கிராம மக்கள் பயன்பெறுவார்கள். அங்கே பல்வேறு சுப நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும், பல்வேறு கூட்டங்கள் நடத்துவதற்கும் ஏதுவாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாய்ப்பு அளிப்பார்களா என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் ஒரு கிராமத்தில் பிறந்தவன்தான். ஒரு நல்ல நோக்கத்தோடுதான் அவர் அந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார். குறிப்பாக, கிராமங்களில் சுப நிகழ்ச்சிகள் மண்டபங்களில் செய்வதைவிட, வீடுகளிலும், பொது இடங்களிலும் நடத்துவது வாடிக்கையாக இருக்கிறது. ஆகவே, அவர் குறிப்பிடுவதைப்போல, அனைத்து ஊராட்சிகளிலும், ஊராட்சிகளில் அடங்கியிருக்கக்கூடிய துணை கிராமங்களிலும் இதுபோன்ற சமுதாயக் கூடங்களைக் கட்டினால், திருமணம் போன்ற சுபகாரியங்கள் செய்பவர்களுக்கு சுலபமாக இருக்கும். செலவுகள் குறையும் என்ற கருத்தின் அடிப்படையில் உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது ஒரு பெரிய திட்டம். அதற்குத் தேவையான ஆலோசனைகளை, நிதியுதவிகளை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, தமிழகம் முழுவதும் அதை விரிவுபடுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர் அவர்கள், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*